முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

# மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

## சோபகிருது வருடம் மாசி மாதம் 20 திகதி முதல் சோபகிருது வருடம் மாசி மாதம் 27 திகதி வரை

## (03.03.2024 ஞாயிறு முதல் 10.03.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மண்ணுலகை காத்திட எண்ணி
மாதரும வேலியிட்ட அரங்கா
இன்னாளில் உன் அவதார
இணையிலா மகிமை போற்றி
2. போற்றியே வார ஆசிதனை
புகலுவேன் இந்தியா தமிழகத்தில்
உற்றதொரு சோபகிருது சால்திங்கள்
உயர்வான இருபான் திகதிமேல் இருபானேழ் திகதிவரை
3. வரை நடக்கும் நிகழ்வாகவே
வருங்கால பலனாக அகத்தியமகரிஷி யானும்
உரைப்பேன் அரங்கஞானி கேட்க
உண்மைநெறி கலியில் போதிக்கும்
4. போதிக்கும் அரங்கன் வழிமுறை
புண்ணியமாக கலியுக மக்களும்
ஆதரித்து இந்தியா தமிழக
ஆளுமைகளும் அதிகாரிகளும் ஏற்றால்
5. ஏற்றால் போதும் நடப்பின்
எல்லா நெருக்கடிகளும் விலகி
மாற்றம் இந்தியா தமிழகத்தில்
மதசாதி இனவெறி எனஇல்லா
6. எனஇல்லா எல்லோரும் சமம்
எல்லோருக்கும் எல்லாம் கிட்டும்படி
தானென்ற சுருட்டல் பதுக்கலில்லா
தன்னார்வ தொண்டு நிறைந்த

7. நிறைந்த ஆளுமைகளாக
   நீதி நேர்மை காக்கின்ற
   அறம் செறிந்த அருள் நிறைந்த
   ஆபத்தை வெல்கின்ற மகாசக்தி
8. மகா சக்திமிகு ஆளுமையாக
   மாற்றம் இந்தியா தமிழக ஆளுமைகள்
   வகைபட கண்டு உயரும்
   வருங்காலம் மனதில் எண்ணி
9. எண்ணி சேவை ஆற்றா
   எந்தப்பிடிப்பும் திடநிலை இல்லா
   தன்னலம் கருதி தேர்தல் களத்தில்
   தாவித்தாவி தடம் மாறுகின்ற
10. மாறுகின்ற கழகங்களெல்லாம்
   மக்களால் புறக்கணிக்கப்பட்டு
   ஆறுமுகனார் ஆசி பெற்றவர்கட்கே
   ஆறுதலும் வாய்ப்புமாக மாறி களம்சிறக்கும்
   வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் மாசி மாதம் 20ம் நாள் 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 27ம் நாள் 10.03.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

பூவுலகினை காத்திடவே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக தோன்றி எல்லையில்லா தருமங்களை செய்து மாதரும சக்தி எனும் தரும வேலியிட்டு காக்கின்ற ஆறுமுகஅரங்கமகா தேசிகரே உமது அவதாரத்தின் மகிமை அளவிடற்கு அரியது ஈடு இணையில்லாதது அரங்கமகானே உமைப் போற்றியே சோபகிருது வருடம் மாசி மாதம் 20ம் நாள் 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 27ம் நாள் 10.03.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்திற்கான வார ஆசி நூல்தனை அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தயவே வடிவான உண்மை நெறியாம் அரங்கமகா தேசிகனார் போதிக்கும் தரும ஞான நெறிகளை புண்ணியத்தின் வழிகளாக கலியுக மக்களும், மக்களை ஆளும் ஆட்சியர்களும், அதிகாரிகளும் ஏற்று பின்பற்றி சுத்த சன்மார்க்க நெறிநின்று நடந்து வந்தால் போதுமப்பா தற்சமயம் நாட்டினை பற்றியுள்ள எல்லாவிதமான நெருக்கடிகளும் நாட்டை விட்டு விலகி நல்ல மாற்றங்கள் உருவாகுமப்பா.

இந்தியா தமிழகத்திலே மதம், சாதி, இனவெறி இல்லாமல் போய் எல்லோரும் சமம் என்ற உணர்வும் மிகுந்து காணும் எல்லோர்க்கும் எல்லாம் கிடைக்கின்ற சமநிலை உருவாகும் தன்னலம் இல்லாத சுருட்டல் இல்லாத பதுக்கல் இல்லாத நிலையும் தன்னார்வ தொண்டுள்ளமும் மிகுந்த ஆளுமைகளாக நீதியையும் நேர்மையையும் காக்கின்ற அறமும் தர்மமும் மிகுந்த அருள் நிறைந்த ஆபத்துகளை வெல்கின்ற மகாசக்தி மிக்க ஆளுமையாக இந்தியா தமிழகத்தின் ஆளுமைகள் உயர்வடையும்.

வருங்காலத்தில் மக்களின் தேவைகளை அறிந்து சேவை மனப்பான்மையுடன் செயல்படாமல் எந்தவிதமான உறுதியும் இல்லாமல் தன்னலம் மிகுந்து தன்னை காத்துக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையுடன் தேர்தல் களத்திலே கட்சிகளிடையே தாவித்தாவி தடம் மாறுகின்ற கழகங்கள் எல்லாம் மக்களால் புறக்கணிக்கப்படும் நிலை உள்ளதப்பா. முருகப்பெருமானின் அருளாசி பெற்றவர்க்கே வாய்ப்பு கிடைத்து வெற்றி பெறும் சூழலும் உள்ளதப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—